1967 ஜூலை 13]

* 318 *Q.*—THIRU A. CHIDAMBARANATHA NADAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state —

(*a*) the present bed strength of the Government Hospital at Colachel :

(*b*) whether there is any proposal to increase the bed strength of this Hospital in view of the over increasing number of in-patients and

(*c*) the steps taken so far to increase the bed strength ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) பதினான்கு.

(இ) & (உ) இம்மருத்துவ மனையில் 20 படுக்கைகளுடன் கூடிய கூடுதலான வார்டு ஒன்று கட்டுவதற்கான செயற் குறிப்பைப் பற்றி அரசு ஆலோசனை செய்தது. அரசின் நிதி நிலைமை, கடினமாக இருப்பதால் இச்செயற் குறிப்பு தள்ளி வைக்கப்பட்டது.

திரு. எ. சிதம்பரநாத நாடார் : குளச்சல் நகரமானது ஜனநெருக்கம் கூடுதலாகப் பெருகிக் கொண்டு வருகிற காரணத்தால், ஆஸ்பத்திரியில் கூடுதலாக படுக்கை வசதியை ஏற்படுத்த சர்க்காருக்கு அபிப்பிராயம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றி இப்போது அரசாங்கத்தின் கவனத்தில் இல்லை.

Water supply to Panruty

*319 *Q.*—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal with the Government to provide protected water supply to Panruty town in South Arcot district?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பன்ருட்டி நகரத்திற்கான நீர் வழங்கும் திட்டம் ஒன்றைப் புலனாய்வு செய்வதற்கு ஒப்பும் கோரிக்கை ஒன்றை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. எஸ். ராமச்சந்திரன் : பன்ருட்டி நகரம் தென்னாற்காடு மாவட்டத்தில் வியாபார இடமாக இருப்பதாலும், ஏராளமான மக்கள் வந்து போவதாலும், அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தர சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உடனடியாக நடவடிக்கை எடுக்க சர்க்கார் ஆலோசனை செய்து வருகிறது.

உடுக்குறியிடப்படாத வினாக்கள்.

கவர்னர் மாளிகை பணியாளர்கள்

1 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய முதல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கவர்னர் மாளிகையில் (ஊட்டி and சென்னை) பணிபுரிபவர்களுக்கென்று கட்டப்பட்ட வீடுகள் மொத்தம் எத்தனை ?